





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!







# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 31.12.2019


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்









# தமிழக நிகழ்வுகள்

- **தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாத்தல் மற்றும் நதிகள் சீரமைத்தல் கழகமானது இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு** செய்யப்பட்டுள்ளது.
    - இதற்கான சான்றிதழை முதல்வர் பழனிசாமியிடம் நதிகள் சீரமைத்தல் கழகத்தின் தலைவர் சத்யகோபால் அளித்தார். தமிழகத்தில் நீர்வள ஆதாரங்களைப் பாதுகாப்பதுடன், நதிகளையும் சீரமைப்பதற்கு தனி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.
    - இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, நீர்வள ஆதாரங்கள் பாதுகாத்தல் மற்றும் நதிகள் சீரமைத்தல் கழகமானது அமைக்கப்பட்டு, அதன் நிர்வாக இயக்குநராக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரி கே.சத்யகோபால் நியமிக்கப்பட்டார்.
    - **செய்தி துளிகள்:**
        - இந்திய நிறுமங்கள் சட்டம்-1956 என்பது, இந்தியாவில் நிறுமங்களை ஒழுங்குபடுத்த உருவாக்கப்பட்ட ஒரு சட்டம் ஆகும்.
        - நிறுமம் என்பது சில நபர்கள், தாமாகவே முன்வந்து கூட்டாக இணைந்து ஏதேனும் ஒரு வர்த்தகத்தை மேற்கொண்டு அதில் கிடைக்கும் இலாபத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் அமைப்பு.
        - இந்திய நிறுமங்கள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற இத்தகைய கூட்டமைப்புகள், நிறுமம் என்ற அந்தஸ்தை பெறுகின்றன.

# தேசிய நிகழ்வுகள்

- **இந்திய ராணுவத்தின் 28-ஆவது தலைமைத் தளபதியாக மனோஜ் முகுந்த் நராவனே டிசம்பர்.31 அன்று பொறுப்பேற்கிறார்.**

- ராணுவ தலைமைத் தளபதியாக இருந்த விபின் ராவத் செவ்வாய்க்கிழமையுடன் ஓய்வு பெறும் நிலையில், ராணுவ துணைத் தளபதியான முகுந்த் நரவனே அந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னதாக நரவனே, சீனாவுடனான எல்லையை பாதுகாக்கும் இந்திய ராணுவத்தின் கிழக்கு படைப் பிரிவுக்கு தலைமை வகித்து வந்தார்.
- **செய்தி துளிகள்:**
  - கடந்த 37 ஆண்டுகளாக ராணுவ பணியில் இருக்கும் நரவனே, ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் கிளர்ச்சியை கட்டுப்படுத்துவது, அமைதி நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்
  - 1980-ஆம் ஆண்டு சீக்கிய காலாட் படையில் இணைந்து தனது ராணுவப் பணியை தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

- **நாட்டின் முதல் 'முப்படைத் தளபதி'யாக ராணுவத் தலைமைத் தளபதி விபின் ராவத்தை மத்திய அரசு நியமித்துள்ளது.**
  - தற்போது, ராணுவத் தலைமைத் தளபதி விபின் ராவத்துக்கு 62 வயது பூர்த்தியாகவில்லை என்றாலும், அவர் பதவியேற்று 3 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டதால், செவ்வாய்க்கிழமையுடன் அப்பதவியிலிருந்து அவர் ஓய்வு பெறுகிறார்.
  - எனவே, 65 வயது வரை முப்படைத் தளபதி பதவியில் அவர் நீடிக்க வாய்ப்புள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
  - **செய்தி துளிகள்:**
    - பிரிட்டிஷாரின் கிழக்கிந்திய கம்பெனியால், 1776ம் ஆண்டு, கொல்கத்தாவில், ராணுவப் படை தொடங்கப்பட்டது. இது தான், தற்போதைய இந்திய ராணுவத்தின் தொடக்கப் புள்ளி.
    - இதனைத் தொடர்ந்து, 1833ம் ஆண்டு, வங்காளம், மும்பை,

சென்னை உள்ளிட்ட இடங்களில், ராணுவப் படை விரிவுபடுத்தப்பட்டது. இவை இந்திய ராணுவமாக உதயமானது

- **ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் கீழ்,** வடகிழக்கு மாநிலமான **நாகாலாந்து** முழுவதும் **'பதற்றம் மிகுந்த பகுதி'** என்று **மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.**
    - இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில் நாகாலாந்து மாநிலம் முழுவதும் அச்சுறுத்தல்கள் அதிக அளவில் நிலவுவதால், அங்கு ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தை தொடர வேண்டிய அவசியம் உள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - 1958-ஆம் ஆண்டு ஆயுதப் படை சிறப்பு அதிகாரங்கள் சட்டம் கொண்டு வரப்பட்டது.
        - ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இந்த சட்டத்தை நீக்க வேண்டும் என்று பல்வேறு அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. நாகாலாந்தில் பல ஆண்டுகளாக இந்த சட்டம் அமலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™

## விளையாட்டு நிகழ்வுகள்

- **மகளிர் டென்னிசில் கடந்த 10 ஆண்டுகளின் தலைசிறந்த வீராங்கனையாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.
    - இந்த 10 ஆண்டுகளில் அவர் 12 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளதுடன், டபுள்யுடிஏ ஒற்றையர் தரவரிசையில் நம்பர் 1 வீராங்கனையாக தொடர்ந்து மூன்றரை ஆண்டுகளுக்கு ஆதிக்கம் செலுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

- இதை கவுரவிக்கும் வகையில் அசோசியேட்டட் பிரெஸ் சார்பில் செரீனாவுக்கு சிறப்பு விருது வழங்கப்பட உள்ளது.
- **செய்தி துளிகள்:**
    - கடினமான கோர்ட்டில் 13 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டங்களை வில்லியம்ஸ் வென்றுள்ளார்.
    - ஆஸ்திரேலிய ஓபனில் வென்ற பெரும்பாலான பட்டங்களுக்கான திறந்த சகாப்த சாதனையை வில்லியம்ஸ் வைத்திருக்கிறார்
    - மேஜர்களில் 349 போட்டிகளில் வென்ற பெண்கள் மகளிர் ஒற்றையர் போட்டிகளிலும் அவர் சாதனை படைத்துள்ளார்.

## திருக்குறள்

**குறள் எண் : 63**

குறள்பால்: அறத்துப்பால்

குறள்இயல்: இல்லறவியல்

குறள்அதிகாரம்: மக்கட்பேறு

**தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**

**தம்தம் வினையான் வரும்.**

**விளக்கம்:** தம் பிள்ளைகளைப் பெறுதலாகிய அச்செல்வம், அவரவர் செய்யும் நல்வினைகளால் வரும்.